[24th October 1964

திரு. மீ. கலியாணசுந்தரம்: எவ்வளவு பேர்கள் ஆசிரியர்கள்? எவ்வளவு பேர்கள் ஆசிரியர்கள் அல்லாதவர்கள்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த விவரம் என்னிடம் இல்லை.

அமைச்சர்களின் சொத்து விவரங்கள்

* 83 **கேள்வி.—திரு. மு. கருணாநிதி:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாநிலங்களிலுள்ள அமைச்சர்கள் தங்களுடைய சொத்துக்களின் விவரங்களை அரசாங்கத்திற்கு அறிவிக்க வேண்டுமென்று மத்திய அரசு, மாநில அரசாங்கங்களுக்கு ஏதேனும் உத்திரவு பிறப்பித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் இம்மாநில அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) There has been no directive from the Central Government in this regard. But the Madras Government have decided that the Ministers should report to the Chief Minister and the Party Chief their assets and liabilties and also send annual reports about them. The details are being worked out.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அமைச்சர் அவையிலே இருக்கக்கூடிய அமைச்சர்களெல்லாம் முதல் அமைச்சர்களிடம் தங்களுடைய கணக்குகளைக் கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். அமைச்சர்களுடைய பெயரில் இருக்கக்கூடிய சொத்துக்களை மட்டும் கொடுக்கவேண்டுமா? அமைச்சர்களுடைய மனைவிமார்கள் மக்கள் இவர்கள் பெயரில் உள்ள சொத்துக்களின் விவரங்களையும் கொடுக்கவேண்டுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: Details are being worked out. என்று சொன்னேன். அந்த வகையில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. விவரங்கள் இப்பொழுது கவனிக்கப்பட்டு வருகின்றன.

திரு. இராம. அரங்கண்ணல்: இப்படி அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் யாரிடம் சொத்து விவரங்களைக் கொடுக்கவேண்டும்? அப்படி ஒப்படைக்கின்ற நேரத்தில் அதனுடைய நகல் நமது சபை முன் வைக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சந்தானம் கமிட்டி என்று ஒரு கமிட்டி நிறுவப்பட்டது. பார்லிமெண்டு, மத்திய அரசாங்கம் அதற்கு ஏற்பாடு செய்தது. அவர்கள் லஞ்ச ஒழிப்பு விஷயத்தைப் பற்றி பல சிபார்சுகளைச் செய்திருக்கிறார்கள். அந்த சிபார்சுகளில் இதெல்லாம் கூட சேர்ந்து இருக்கிறது. மந்திரிகளைப் பொறுத்த மட்டில் இந்த ஏற்பாடு. முதல் அமைச்சர் கூட இதில் சேர்ந்தவர் தான். முதல் அமைச்சரும் அந்த விவரங்களெல்லாம் கொடுக்க வேண்டியது தான். அதைக் கட்சி ரீதி

24th October 1964]

யிலே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. அரசாங்க ஆட்சி ரீதியிலே இல்லை. ஆனல், சட்ட மன்ற உறுப்பினர்களைப் பொறுத்த மட்டில், அதைப்பற்றிக் கூட சந்தானம் கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது. அதைப்பற்றி சபையின் தலைவர், மற்றக் கட்சித் தலைவர் இவர்களையெல்லாம் சேர்த்து வைத்துப்பேசி இது பற்றி எல்லோருக்கும் உடன்பாடு ஏற்படக்கூடிய வகையில் என்ன செய்வது என்று பின்னல் முடிவு செய்யலாம் என்று இருக்கிறேம்.

திரு. ம. கமலநாதன்: அமைச்சர்கள் முதல் அமைச்சர் அவர்களிடமும் கட்சித் தலைவரிடமும் கணக்கு காட்டவேண்டும் என்று முதல் அமைச்சர் சொன்னர்கள். முதல் அமைச்சர் அவருடைய கணக்கை யாரிடம் காட்டுவது என்று அறியலாமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: காங்கிரஸ் தலைவர், அல்லது பிரதம மந்திரி, அல்லது மத்திய அரசாங்கத்து உள் நாட்டு அமைச்சர் இவர்களிடம் கொடுக்கலாம். முதல் அமைச்சர் யாரிடம் கொடுப்பது என்பது தான் இப்பொழுது 'வொர்க் அவுட்' ஆகிறது.

லஞ்சக் குற்றங்கள்

* 84 கேள்வி—**திரு. ப. உ. சண்முகம்:** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) லஞ்ச ஒழிப்பிற்காக தனி இலாகா ஏற்படுத்திய பின் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள லஞ்சக்குற்றங்கள் எத்தனை?

(இ) அவைகளின் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Ten cases have been detected. Enquiries in about 145 cases are in progress.

(*b*) One case has been charge-sheeted and is pending in Court; the other nine cases are under investigation and will be charge-sheeted shortly.

Fourth Five-Year Plan

* 85 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether draft proposals for the Fourth Five-Year Plan have been finalised; and

(*b*) if so, the total out-lay for the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) No.

(*b*) Does not arise.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இதற்கு முன்பு ஒவ்வொரு திட்டத்திற்கான விவரங்களைத் தயாரிக்கக்கூடிய சமயத்தில் இந்தச் சட்ட சபையில் உள்ள எல்லாக் கட்சியினரையும் கலந்து செய்தது போல அந்த முறையில் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.